# மாணவர்களுக்கு உதவித்தொகை



காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான தேசிய உதவித்தொகை திட்டத்தின் கீழ் 12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

**புதுச்சேரி, மார்ச் 20–**

காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான தேசிய உதவித்தொகை திட்டத்தின் கீழ், உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு முது நிலைப் படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின் பட்ட மேற்படிப்பு பயிலும் 12 மாணவர்களுக்கு தேசிய உதவித்தொகை திட்டத்தின் கீழ், தலா ரூ. 3 லட்சம் வீதம் உதவித்தொகையை நிறுவனத்தின் இயக்குநர் சசி காந்த தாஸ் வழங்கினார்.

இதில், பேராசிரியர் விக்ராந்த், நிறுவனத்தின் ரூசா ஒருங்கிணைப்பாளர் குமரேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

Dinamalar | 21/03/26 | page - Add - 3